**Indian Journal of Modern Research and Reviews**

**This Journal is a member of the *'Committee on Publication Ethics'***

**Online ISSN:**2584-184X

***Research Article***

# கேரள - தமிழக மேல்நிலைப்பள்ளி தமிழ்ப் பாடத்திட்டம்

**முனைவர் பால்ராஜ்., ரா.**

முதுமுனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம், கேரளா, இந்தியா

**Corresponding Author:** *முனைவர் பால்ராஜ்., ரா.

**DOI:** https://doi.org/10.5281/zenodo.20204516

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் பாடநூல் கேரள மற்றும் தமிழகத்தில் எவ்வாறு அமைந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது கற்றல் என்னும் செயல் தனி மனித மேம்பாட்டிற்கும் சமூக நலனுக்கும் அடிப்படையானது. இது இலக்கிய மொழிக் கல்விக்கும் பொதுவானதாகும். மொழிக்கல்வி சுவைபட அமைய வேண்டும் என்பது பொதுவிதியாக சொல்லினும் அது மக்களின் பண்பாடு வரலாறு சார்ந்த ஒழுக்க விழுமியங்களின் சேர்க்கை என்பதை அடிநாதமாக கொண்டு இயங்கக்கூடியதாக அமைய வேண்டும். இவற்றை உள் முகமாக வைத்தே பாடத்திட்டங்கள் அமைக்கப்படுகின்றன. சமூகத்தின் தேவையை உணர்ந்து முதன்மைக் கற்றல் அடைவுகள் துணைக் கற்றல் அடைவுகள் என கூறுகளாகப் பகுக்கப்பட்டு அதனுடன் ஒன்றிய விடைகளை எழுப்பி செயல்பாடுகளாக மாணவர்களிடம் கொண்டு சேர்க்கின்றன. இதன் விளைவுகளாக நம் சமூகத்தில் மேம்பாடுகளை உணர்ந்து எதிர்காலத்தில் கட்டமைக்கப்பட வேண்டிய கூறுகளை மாணவர்களிடம் வளர்ப்பதே பாடத்திட்டங்களாகும்.

**Manuscript Information**

- **ISSN No:** 2584-184X
- **Received:** 04-04-2026
- **Accepted:** 07-05-2026
- **Published:** 15-05-2026
- **MRR:**4(5); 2026: 84-86
- **©2026, All Rights Reserved**
- **Plagiarism Checked:** Yes
- **Peer Review Process:** Yes

**How to Cite this Article**

முனைவர் பால்ராஜ்., ரா., கேரள - தமிழக மேல்நிலைப்பள்ளி தமிழ்ப் பாடத்திட்டம். Indian J Mod Res Rev. 2026;4(5):84-86.

**Access this Article Online**

www.mrrjournal.in

**கலைச் சொற்கள்:** நூல் - புத்தகம், கல்விமான் - அறிஞர், பாடம் - பயிற்சி, திட்டம் - ஏற்பாடு



© 2026 முனைவர் பால்ராஜ்., ரா. This is an open-access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY NC ND).https://creativecommons.org/licenses/by/4.0/

## முன்னுரை

கல்வி என்பது சமூக வளர்ச்சியின் அடிப்படை. அதில் மொழிக் கல்வி மாணவர்களின் சிந்தனை, பண்பு கலாச்சாரம் மற்றும் படைப்பாற்றலை வளர்க்கிறது. தென்னிந்திய மாநிலங்களான கேரளா மற்றும் தமிழ்நாடு ஆகியவற்றின் மேல்நிலைப்பள்ளி தமிழ்ப் பாடத்திட்டங்கள் பல ஒற்றுமைகளையும் வேறுபாடுகளையும் கொண்டுள்ளன. இவ்விரு மாநிலங்களின் தமிழ்ப் பாடத்திட்டங்களை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

**பாடத்திட்டத்தின் நோக்கம்:**

**பாடத்திட்டம்:**

பாடத்திட்டம் என்பது ஒரு குறிப்பிட்ட கல்வி ஆண்டு அல்லது பயிற்சி வகுப்பில் மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட வேண்டிய பாடங்கள், தலைப்புகள் மற்றும் கற்றல் அனுபவங்களின் முறையான மற்றும் விரிவான பட்டியலாகும். இது கற்றல் நோக்கங்கள் கற்பித்தல் முறைகள் மதிப்பீட்டு முறைகள் மற்றும் தேர்வு விதிமுறைகளை உள்ளடக்கிய ஒரு வழிகாட்டியாகச் செயல்படுகிறது.

**பாடத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்:**

**பொருளடக்கம் :**

எந்தெந்தப் பாடங்கள் எந்தெந்த வரிசையில் கற்பிக்கப்பட வேண்டும் என்ற விவரம்.

**கற்றல் நோக்கம் :**

இந்த வகுப்பின் முடிவில் மாணவர்கள் என்ன தெரிந்து கொள்ள வேண்டும் அல்லது செய்ய வேண்டும் என்ற இலக்கு.

**மதிப்பீடு :**

தேர்வுகள், வீட்டுப் பாடங்கள் மற்றும் பணிகள் பற்றிய தகவல்கள்.

**வழிகாட்டி :**

ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்குப் பாடப்பகுதிகளை முடிப்பதற்கான கால அட்டவணை. சுருக்கமாகச் சொன்னால் ஒரு வகுப்பறையில் என்ன, எப்படி, எப்போது, எவ்வளவு கற்பிக்கப்பட வேண்டும் என்பதை வரையறுக்கும் ஒரு வரைபடமே பாடத்திட்டம் ஆகும்.

**கேரள பாடத்திட்டம்**

- மொழித் திறன்களை வாழ்க்கைச் சூழலோடு இணைத்துக் கற்பிக்கிறது.
- மாணவர்களின் செயற்பாட்டு திறன், உரையாடல் திறன், விமர்சன சிந்தனை ஆகியவற்றை மேம்படுத்துகிறது.
- செயல்முறை அடிப்படையிலான கற்றலுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

**தமிழக பாடத்திட்டம்**

- தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றின் பாரம்பரியத்தை மாணவர்களுக்கு எடுத்துரைக்கிறது.
- தேர்வுமுகப் பயிற்சிக்கும் கல்விசார் அடித்தளத்திற்கும் முக்கியத்துவம் அளிக்கிறது.
- இலக்கணம் மற்றும் இலக்கிய அறிவை ஆழமாக கற்பிக்கிறது.

**பாடப்பகுதிகளின் அமைப்பு**

| அம்சம் | கேரள | தமிழ்நாடு |
|---|---|---|
| பாட அமைப்பு | செயல்பாட்டு முறை | அலகுமுறை |
| இலக்கியத் தேர்வு | சமகால மற்றும் சமூகப் பொருள்கொண்ட பாடங்கள் | சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரை |
| இலக்கணம் | பயன்பாட்டு இலக்கணம் | விதிமுறை சார்ந்த இலக்கணம் ; |
| மொழிப் பயிற்சி | உரையாடல், கட்டுரை செயல்பாடு | எழுதுதல், மனப்பாடம், தேர்வு பயிற்சி |

**கற்பித்தல் முறை**

**கேரள:**

- மாணவர் மையக் கற்றல் நடைமுறையில் உள்ளது.
- குழு விவாதம், திட்டப்பணி, செயல்முறை கற்றல், ஆகியவை இடம்பெறுகின்றன.
- ஆசிரியர் வழிகாட்டியாகச் செயல்படுகிறார்.

**தமிழ்நாடு**

- ஆசிரியர் மையக் கற்பித்தல் இன்னும் அதிகமாகக் காணப்படுகிறது.
- பாடநூல் சார்ந்த கற்றலும் தேர்வு நோக்குப் பயிற்சியும் முக்கியமாக உள்ளன.
- சமீப காலங்களில் செயல்பாட்டுக் கற்றல் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது.


© 2026 முனைவர் பால்ராஜ்., ரா. This is an open-access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY NC ND).https://creativecommons.org/licenses/by/4.0/

**மதிப்பீட்டு முறை**

**கேரளா:**

- தொடர்ச்சியான மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை (ஊஊநு) பயன்படுத்தப்படுகிறது.
- வகுப்பறைச் செயல்பாடுகள், திட்டப்பணிகள், வாய்மொழித் திறன் ஆகியவையும் மதிப்பெண்ணில் சேர்க்கப்படுகின்றன.

**தமிழ்நாடு:**

- பொதுத் தேர்வு (போட்டித் தேர்வு) முக்கிய இடம் பெறுகிறது.
- எழுத்துத் தேர்வுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகிறது.

**மொழி மற்றும் இலக்கிய அணுகுமுறை:**

**கேரள பாடத்திட்டம்:**

- எளிய வாழ்வியல் சார்ந்த மொழிநடை காணப்படுகிறது.
- சமூக உணர்வு, மனிதநேயம், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு போன்ற கருப்பொருட்கள் இடம்பெறுகின்றன.

**தமிழக பாடத்திட்டம்:**

- செம்மொழித் தமிழ் மற்றும் இலக்கியப் பாரம்பரியத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.
- பாரதியார், பாரதிதாசன், சங்க இலக்கியப் பாடல்கள் போன்றவை விரிவாக இடம்பெறுகின்றன.

**ஒற்றுமைகள்**

- இரு மாநிலங்களும் தமிழ் மொழித்திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.
- இலக்கியம், இலக்கணம், கட்டுரை, கவிதை, உரைநடை ஆகியவை இடம்பெறுகின்றன.
- மாணவர்களின் மொழிப்புலமையை வளர்க்கும் நோக்கம் இரண்டிலும் உள்ளது.

**முடிவுரை**

கேரள மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களின் மேல்நிலைப்பள்ளி தமிழ்ப் பாடத்திட்டங்கள் தனித்துவமான கல்வி அணுகுமுறைகளைக் கொண்டுள்ளன. கேரள பாடத்திட்டம் செயல்பாட்டு மற்றும் வாழ்க்கை முறை சார்ந்த கற்றலை வலியுறுத்துகிறது. தமிழகப் பாடத்திட்டம் இலக்கிய ஆழத்தையும் மொழிப் பாரம்பரியத்தையும் முன்னிறுத்துகிறது. இரண்டின் சிறப்புகளையும் ஒருங்கிணைத்தால் மாணவர்களுக்கு முழுமையான தமிழ்க் கல்வியை வழங்க முடியும்.

## பார்வை நூல்கள்


1. அண்ணாதுரை ம. தமிழ்க் கல்வியும் பாடத்திட்டமும். சென்னை: தமிழ்நாடு பாடநூல் கழகம்; 2010.
2. இராமசாமி க. மேல்நிலைப்பள்ளி தமிழ் கற்பித்தல் முறைகள். தமிழ்க் கல்வி ஆய்விதழ். 2018;5(2):45–67.
3. கண்ணன் வ, சுப்பிரமணியன் ம. மொழிக்கல்வி மற்றும் பாடத்திட்ட வடிவமைப்பு. 2வது பதிப்பு. கோயம்புத்தூர்: காவ்யா பதிப்பகம்; 2012.
4. கேரள அரசு. மேல்நிலைப்பள்ளி தமிழ்ப் பாடத்திட்டம். திருவனந்தபுரம்: கேரள பாடநூல் மற்றும் கல்வி உபகரண ஆணையம்; 2015.
5. சுந்தரம் ப. தமிழ் இலக்கியக் கல்வியில் நவீன போக்குகள். சர்வதேசத் தமிழாய்வு இதழ். 2019;12(1):23–41.


**Creative Commons License**

This article is an open-access article distributed under the terms and conditions of the Creative Commons Attribution–Non-commercial–No Derivatives 4.0 International (CC BY-NC-ND 4.0) License. This license permits users to copy and redistribute the material in any medium or format for non-commercial purposes only, provided that appropriate credit is given to the original author(s) and the source. No modifications, adaptations, or derivative works are permitted.

**About the Corresponding Author**



**முனைவர் பால்ராஜ்., ரா.** அவர்கள் கேரளப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் முதுமுனைவர் பட்ட ஆய்வாளராகப் பணியாற்றி வருகிறார். தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு மற்றும் கல்வியியல் தொடர்பான ஆய்வுகளில் ஆர்வமுடன் ஈடுபட்டு வருகிறார். பல்வேறு கல்வி மாநாடுகள் மற்றும் ஆய்விதழ்களில் ஆய்வுக்கட்டுரைகள் வெளியிட்டுள்ளார். திருவனந்தபுரம், கேரளா, இந்தியாவைச் சேர்ந்தவர்.



© 2026 முனைவர் பால்ராஜ்., ரா. This is an open-access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY NC ND).https://creativecommons.org/licenses/by/4.0/